1971 ஜூலை 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்ற குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. மானியம் தரவேண்டும் என்று அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. கல்வி மானியம் நகராட்சி மன்றங்களுக்குத் தருவதில், சென்னை மாநகராட்சிக்குத் தருவது குறைவான அளவில்தான் தரப்படுகிறது. மானியத்தைப் பெருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது பரிசிலனையில் இருக்கிறது. ஆகவே, அவற்றை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டும் என்ற சூழ்நிலை வந்தால், அதைப் பரிசீலிக்கலாம். மிகவும் கஷ்டப்பட்டு, நடத்தவே முடியாது என்று தேங்கிக் கிடக்கும் அளவில் உள்ள முனிசிபாலிடிப் பள்ளிகளை முதலில் எடுக்க வேண்டும். சென்னை மாநகராட்சி, பள்ளிகளை நடத்தும் அளவில் சக்தி பெற்றிருக்கிறது. நிதி பற்றாக்குறை பற்றித் தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

Common good fund in Madhavaram Panchayat Union.

*418. Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any common good fund has been created by the Panchayat Union at Madhavaram; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் யானைக்கால் நோய் ஒழிப்பு

*419 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் "யானைக்கால்" நோயினை அகற்றிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : யானைக்கால் நோய் பரவியுள்ள வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் நான்கு தேசிய யானைக்கால் நோய் கட்டுப்பாடு பிரிவுகள் முன்னோடித் திட்டங்களாக 1957-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் மூன்று இலட்சம் பேர்களுக்கு செயல்படுகிறது. மேலே சொல்லிய இந்நான்கு மாவட்டங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நோய் பரப்பும் கொசுக்கள் பெருகியுள்ள இடங்களில் புழுக்கொல்லி எண்ணெய் மருந்தை வாரந்தோறும் முறையாக தெளிப்பதே நோய்க் கட்டுப்பாடு திட்டத்தின் தலையாய பணியாகும். யானைக்கால் நோயுற்றவர்கள் அருகாமையிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு ஆலோசனை கூறப்படுகின்றனர்.